[1994 நவம்பர் 7

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 23, திரு. ப. கலியபெருமாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 24, திரு. வேலையா, இருக்கையில் இல்லை.

வினா எண் 25, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

25—

அவசர அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனைக்குப்பின் இரத்தம் செலுத்துதல்.

****36520—டாக்டர் மு. காளிராஜன்:***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவசர அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்யாமல், இரத்தம் செலுத்துவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த அரசு விதிகளைத் தளர்த்திக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பரிசோதனை செய்யாமல் ரத்தம் செலுத்துவதைத் தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரசு மருத்துவமனைகளில் ரத்தம் பரிசோதனை செய்ய Elisa Kit, Rapid Test Kit வழங்கப்பட்டு வருகிறது. தனியார் ரத்த வங்கிகளிலும் இதுபோன்ற பரிசோதனை செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு உள்ளது.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ரத்த வங்கிகளிலும், தனியார் ரத்த வங்கிகளிலும் எய்ட்ஸ் நோய் பரிசோதனை சரியான முறையில் செய்யப்படுகிறதா என்பதை அறிய ஒரு விழிப்புக்குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 நவம்பர் 7]

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எய்ட்ஸ் டைரக்டர் மூலமாக, அந்தத் துறையின் மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ரத்த வங்கிக்கும் நேரடியாகச் சென்று இன்ஸ்பெக்ஷன் செய்யப்படுகிறது. அதிலே முறையாக இதை அவர்கள் கடைப்பிடிக்கிறார்களா, இல்லையா என்பது கவனிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் நல்வாழ்வுத் துறையின் சார்பாகப் போகிற அதிகாரிகளும் இதை இன்ஸ்பெக்ஷன் செய்கிறார்கள். அரசு சார்பாக 88 ரத்த வங்கிகள் தமிழகம் முழுவதும் இருக்கின்றன. இந்த 88 இரத்த வங்கிகளையும் ஒவ்வொன்றாக இப்பொழுது இன்ஸ்பெக்ஷன் செய்து கொண்டே வருகிறார்கள். அதோடு இந்த டெஸ்டைச் செய்வதற்கு-- மிக முக்கியமான பிரச்சினை என்ற காரணத்தால் இந்த டெஸ்டை செய்வதற்கு-- அவர்களுக்கு உரிய பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. இப்போது சமீபத்திலே ஊட்டியிலும், கோவை மாவட்டத்திலும் இந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இது தனியாருக்கும் சேர்த்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்க அதிகாரிகளுக்கு மட்டுமல்லாமல், தனியாருக்கும் சேர்த்து இந்த ட்ரெயினிங் கொடுக்கப்படுகிறது. வருகிற 9, 10, 11 இந்த மூன்று நாட்களிலும் சென்னையிலே கொடுக்கப்படுகிறது. செங்கற்பட்டு மற்றும் சென்னை மாவட்டத்திற்கு சேர்த்து கொடுக்கப்படுகிறது. 17, 18, 19 ஆகிய தேதிகளில் அண்ணா மாவட்டத்திற்காக, மதுரையிலே நடத்தப்பட இருக்கிறது. 23, 24, 25 ஆம் தேதிகளில் தஞ்சை, நாகை மாவட்டங்களுக்காக தஞ்சாவூரிலே நடத்தப்பட இருக்கிறது. டாக்டர்கள், அதைப்போல செவிலியர்கள், லேப் டெக்னிஷியன்கள் இப்படி எல்லோருக்கும் அங்கே பயிற்சி கொடுக்கப்படுகிறது. எனவே அரசு இதிலே தீவிரமான நடவடிக்கை எடுப்பதோடு, மிக விழிப்பாகவும் கண்காணித்து வருகிறது. ஏற்கெனவே இருக்கின்ற அந்த அமைப்பே இதைக் கண்காணிப்பதற்குப் போதும் என்று கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை எல்லாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் எய்ட்ஸ் நோய் பரவுவதற்கு பிளட் டிரான்ஸ்மிஷன் மட்டும் ஒரு

காரணம் அல்ல. இம்ப்ராப்பர் ஸ்டெரிலைசேஷன் ஆஃப் ஸ்டிரின்ஜஸ்கூட ஒரு காரணம். முறையாகப் பயின்று, பட்டம் பெறாத மருத்துவர்களை 'குவாக்ஸ்' என்று சொல்வார்கள். அவர்கள் ஊசிகளை ப்ராப்பராக ஸ்டெரிலைஸேஷன் செய்வதும் இல்லை; டிஸ்போஸபிள் ஸ்டிரின்ஜஸ் உபயோகிப்பதும் இல்லை. ஒரு ஊசியைப் போட்டுவிட்டு அதே ஊசியை எடுத்து இன்னொரு பேஷண்டுக்குப் போடுகிறார். இந்த அறியாமையினால் எய்ட்ஸ் நோய் வெகு வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இதை அரசு அறியுமா? அப்படியென்றால் இதுபோன்று எய்ட்ஸ் பரவுவதைத் தடுப்பதற்கு அரசின் நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி, பிளட் பேங்க் எப்படிச் செயல்படுகிறது, அதிலே என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற காரணத்தால் இதைப்பற்றி மட்டும் நான் விளக்கம் தந்தேன். ஒரு வேளை எய்ட்ஸைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சொல்லியிருந்தால் முழுவதும் நான் தந்திருப்பேன். எனவே, இதிலே அரசு மிகத் தீவிரமான கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு தனி டைரக்டரேட் இருக்கிறது. மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். எனவே தனியாக அரசு இதிலே மிகுந்த கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறது. முடிந்தவரை டிஸ்போஸபிள் ஸ்டிரின்ஜ்தான் பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கையை நாம் வைத்துக் கொண்டிருந்தாலும் நடைமுறைச் சிக்கலின் காரணமாக நாம் டிஸ்போஸபிள் ஸ்டிரின்ஜ்ஜை ஒருவேளை பயன்படுத்தவில்லை என்றாலும்கூட, அதிலே கூட சில குறைபாடுகள் இருப்பதாக, அதிலே இருக்கின்ற மற்ற நிபுணர்கள் சொல்கிறார்கள். எனவே, முறையான ஸ்டிரின்ஜுகளையும், இன்ஜெக்ஷன்களையும் அவர்கள் முறையாகப் பாயில் பண்ணிய பின்னாலேயே அதைப் பயன்படுத்த வேண்டும். ஸ்டெரிலைஸ் பண்ணிய பின்னாலே பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே எங்கேயாவது இப்படித் தவறாகப் பயன்படுத்தினால் அது அரசு சார்பாக இருக்கின்ற மருத்துவர்களாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, யார் இதிலே கவனக் குறைவாக இருந்தாலும் நிச்சயமாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

1994 நவம்பர் 7]

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரி மாணவர்கள், சேரக்கூடாதவர்களிடம் சேர்ந்து அவர்களுக்கு அதிக அளவில் எய்ட்ஸ் நோய் வருவதாக செய்திக் குறிப்புகள் கூறுகின்றன. ஆகவே கல்லூரிகளில் மாணவர்களுக்கு எய்ட்ஸ் டெஸ்ட் வைக்கப்படுமா ? இந்தியாவிலேயே ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, மூலக் கேள்வியை நீங்கள் பார்த்துவிட்டு அது சம்பந்தமாகக் கேட்டீர்கள் என்றால் பரவாயில்லை. கல்லூரி மாணவர்களுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: அதாவது அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு எய்ட்ஸ் நோய் வருவதாகச் சொல்கிறார்கள். அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்குத்தான் எய்ட்ஸ் நோய் வருகிறதா? மற்றவர்களுக்கு வருவதில்லையா ? வருகிற பணக்கார நோயாளிகளிடம் எப்படி நாம் கட்டணம் வசூல் பண்ணுகிறோமோ, அதுமாதிரி வருகிற நோயாளிகளுக்கு எல்லாம் எய்ட்ஸ் நோய் இருக்கிறதா என்று டெஸ்ட் பண்ணுகிறார்களா ? இந்தியாவிலே, தமிழ்நாடு எய்ட்ஸ் நோயில் எந்த இடத்தில் இருக்கிறது ? முதல் இடமா, இரண்டாவது இடமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி இது ரத்த வங்கியைப் பொறுத்தது. இதைப்பற்றி தனியாக விவாதம் நடத்துவது என்று சொன்னால் நிறைய நேரம் எடுக்கும். எனவே, பிரசாரத்தின் மூலமாக இப்போது நாம் நாடு முழுவதும் விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறோம். குறிப்பாக, கல்லூரிகளிலே நிகழ்ச்சிகள் நடக்கிறபோது இதைப்பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. எய்ட்ஸ் நோய் என்பது மிகவும் கொடுமையான ஒரு நோய். வேகமாக, விரைவாகப் பரவக்கூடிய ஒரு நோய். குறிப்பாக, மிக இளைஞர்களாக இருக்கக்கூடியவர்கள் இதிலே மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதிலே அரசாங்கம் கண்ணுங்கருத்துமாக அவர்களுக்குக் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறது. எனவே, அந்த வகையிலே பொதுமக்கள் எந்த அளவுக்கு ஒத்துழைப்பைக் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் இதைக் கட்டுப்படுத்த முடியும். சட்டமன்றத்திலே இப்படிப்பட்ட கேள்விகளைக்

கேட்பதுகூட பொதுமக்களிடத்திலே ஒரு விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பயன்படும் என்று நான் கருதுகிறேன். எனவே, அந்த வகையிலே பொதுமக்கள் எந்த அளவிற்கு ஒத்துழைப்பைக் கொடுக்கிறார்களோ, அந்த அளவிற்கு அதைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் ரத்தப் பரிசோதகர், அதாவது லேப் டெக்னிஷியன்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுத்து, பொதுமக்களுக்கு எய்ட்ஸ் நோய் வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றக் கூடியவர்கள் ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்கள். இருந்தாலும் இதிலே தனிப்பட்ட பயிற்சியைக் கொடுக்க வேண்டும், ஒரு இன்டென்சிவ் பயிற்சி கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்போது இரண்டு மாவட்டங்களை ஒன்றாக இணைத்து, மூன்று நாட்கள் தொடர்ச்சியாக அவர்கள் அங்கே தங்கி, அந்தப் பயிற்சியைப் பெறுகின்ற எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி, அரசு சார்பாக இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, தனியார் துறையிலேயும் ரத்த வங்கிகளிலே பணியாற்றக் கூடியவர்களுக்கும் இந்தப் பயிற்சியைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இந்தப் பயிற்சி அவர்களுக்கு இதிலே முழுமையான தெளிவை ஏற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மற்றும் தனியார் ரத்த வங்கிகளில், வருவாயை ஈட்டுவதற்காக மட்டும் ரத்தம் கொடுக்கின்ற பழக்கத்தை மக்கள் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இதற்காக விசேஷமாக ஒரு திட்டமிட்டு, ரத்தம் கொடுப்பதற்கு அதிகமான மக்கள் முன்வருவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

1994 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 'பெய்டு டோனார்ஸ்' என்று இருந்தார்கள். இப்போது அவர்களிடத்திலே ரத்தம் எடுக்கப்படக் கூடாது என்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. எனவே, ரத்தத்தை விற்பதற்காக வரக்கூடியவர்களிடத்திலே இப்போது ரத்தம் எடுக்கக் கூடாது என்பதை அரசாங்கத்தினுடைய கொள்கையாக வைத்துக்கொண்டு இருக்கிறது. எனவே, அதை ஈடுகட்டுகின்ற வகையிலே, தேவையான ரத்தத்தைச் சேமிப்பதற்காக இப்போது லயன்ஸ் கிளப் மற்றும் பல்வேறு மட்டங்களிலே நாம் அவர்களை மோட்டிவேட் செய்து கொண்டு இருக்கிறோம். அதற்காக கேம்ப் நடத்தப்படுகிறது. இதிலே பொது நிறுவனங்கள் நிறைய வகையிலே நமக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, தலைவர்களுடைய பிறந்த நாட்கள் வருகின்றபோதுகூட, மிகப் பயனுடையதாக நமக்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இப்போது 'பெய்டு டோனார்ஸ்' வேண்டாம் என்று சொல்லிவிட்டு, விரும்பி வரக்கூடியவர்களை வைத்து நாம் ரத்தம் எடுக்கிற காரணத்தால் பெரும்பகுதியான இந்தக் குறைபாடு தவிர்க்கப்படுகிறது. இந்தக் குறைபாடு குறைக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பல மாவட்டங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எங்களுடைய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தையும், சேலம் மாவட்டத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. அந்த மாவட்டங்களிலும் பயிற்சி அளிக்கப்படுமா ? எப்போது அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வியாழன் போன்ற நாட்களிலே அந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. ஒவ்வொரு வாரமும் இரண்டு மாவட்டங்களை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். எல்லா மாவட்டங்களிலேயும் சிறப்புப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய முடிவு. எனவே, கண்டிப்பாக தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களிலும் இந்தப் பயிற்சி கொடுக்கப்படும்.

[1994 நவம்பர் 7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபொழுது, பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் இந்த சிகிச்சை செய்யப்படுவதாகச் சொன்னார்கள். இந்தப் பரிசோதனைச் சாலை மூலமாக, இந்த எய்ட்ஸ் நோய் எத்தனை பேருக்கு இருப்பதாகக் கண்டிருக்கிறார்கள். பொதுவாக, இந்த எய்ட்ஸ் நோய் வருவதற்குக் காரணமே, ** அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இந்தக் கேள்வி, நோயாளிகளுக்கு ரத்தம் செலுத்துவதற்கு முன்பு எய்ட்ஸ் நோய் இருக்கிறதா என்று பார்த்து, ரத்தம் செலுத்துவது சம்பந்தமானது.

திரு. சி. ஞானசேகரன்: எத்தனை பேருக்கு எய்ட்ஸ் நோய் வந்திருக்கிறது என்று நம்முடைய பரிசோதனைச் சாலையிலே கண்டிருக்கிறார்கள், அந்த விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? சி.எம்.சி. மருத்துவமனையிலே ஜேக்கப் ஜான் என்கிற சிறந்த, பிரத்யேகமாகப் பயிற்சி பெற்ற மருத்துவர் இருக்கிறார். அவரிடம் தகுந்த ஆலோசனையைப் பெற்று இதற்கான முயற்சியை தமிழகம் எங்கும் எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், வேலூரிலே இருக்கிற சிறப்புப் பயிற்சி பெற்ற ஒரு மருத்துவரைப் பற்றிச் சொன்னார்கள். அரசு சார்பாக அரசு மருத்துவமனையிலே மிகச் சிறந்த டாக்டர்கள், அநேகமாக நம்முடைய தமிழகம் முழுவதும் இருக்கிறார்கள். எனவே, இதற்காக வேறு எங்கேயும் போய் ஆலோசனை பெற வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே அவர்கள் சிறந்த பயிற்சியைப் பெற்றவர்கள். இப்பொழுது இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், பரிசோதனை செய்யப்பட்ட பின்னாலே அந்த இரத்தம் செலுத்தப்படுகிறதா என்பது. அதற்காகத்தான் இந்தப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, எவ்வளவு பேர் அங்கே எய்ட்ஸ்-ஆல் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் என்ற கணக்கு வேண்டுமென்று

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொன்னால், நீங்கள் தனியாக ஒரு கேள்வியைப் போடலாம். சி.எம்.சி.யிலே ஒரே ஒரு கேஸ்தான் இப்பொழுது இருக்கிறது என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது; ஒரேயொரு கேஸ்தான் இப்பொழுது இன்-பேஷண்டாக இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே, தனியாக இதற்காகக் கேள்வி எழுப்பினால் அதைப் பற்றி நாம் பதில் சொல்ல முடியும்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எய்ட்ஸ் நோய் சம்பந்தமாக மாவட்டந்தோறும் பயிற்சி அளிக்கப்படுவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். சமீபத்திலேகூட உலக நாடுகளெல்லாம் சேர்ந்து, சென்னையிலே எய்ட்ஸ் நோயைப்பற்றி ஒரு பெரிய கருத்தரங்கம் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கருத்தரங்கத்தில் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்திருக்கிற மருத்துவர்கள் யாராவது கலந்து கொண்டிருக்கிறார்களா? தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய டாக்டர்கள் ஒவ்வொருவரும் எய்ட்ஸ் நோயைப் பற்றி ஒவ்வொரு கருத்துக்களை, ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். அந்த வகையிலே எப்படிப்பட்ட பயிற்சி பெற்ற டாக்டர்கள், மற்ற டாக்டர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒருவருக்கு எய்ட்ஸ் தாக்கி இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக பிளட் பேங்கிலே இருக்கின்ற பிளட் பேங்க் மெடிகல் ஆபீசர்ஸ் இப்படிப்பட்ட டெஸ்டைச் செய்து நமக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள்தான் கண்டுபிடிக்கிறார்கள். அதற்குத் தேவையான பயிற்சி அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதிலே ஒன்றும் தெரியாமல் இப்பொழுது மருத்துவர்கள் இல்லை. இதை முழுமையாகத் தெரிந்திருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் சிறப்புப் பயிற்சி வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பயிற்சியை நாம் இப்பொழுது தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுபோக, எய்ட்ஸ் வருவதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை என்று சொன்னால் அதற்கு இப்பொழுது டிரீட்மெண்டே கிடையாது. எனவே, மருத்துவர்களுடைய ஆலோசனை அதிலே நமக்குத் தேவைப்படாது.

வராமல் தடுப்பதற்கு என்ன என்று சொன்னால், அதை நீங்களும் சொல்லலாம். எல்லோரும் சொல்லலாம். அதற்கு மருத்துவர்கள் தேவை இல்லை. என்னென்ன நடவடிக்கை, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும், மக்கள் எவ்வளவு விழிப்புணர்வோடு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு ஆலோசனைகளை விளம்பரமாகவும், மற்றபடி சினிமாக்கள் மூலமாகவும், டி.வி. மூலமாகவும் பல்வேறு வகைகளிலே பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இதற்குத் தனிப்பட்ட முறையிலே எந்த ஆலோசனையும் வேறு எங்கிருந்தும் தேவை இல்லை. ஏற்கெனவே இருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு நாம் செய்ய முடியும். ஆனால் பிளட்டிலே இருக்கிறதா, இல்லையா, என்பதைக் கண்டு பிடிப்பதற்காக இப்பொழுது டெஸ்ட் செய்வதற்கு, அதற்குத் தேவையான பயிற்சி நம்முடைய மருத்துவர்களுக்கே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி அ. தி. சரஸ்வதி.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேட்க வேண்டிய கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக் குறிப்பிலேயிருந்து இந்தக் கேள்வி நீக்கப்படுகிறது. திரு. ஞானசேகரன் அவர்கள் ** என்று சொல்லி ஆரம்பித்த அந்தப் பகுதியும் திருமதி சரஸ்வதி அவர்கள் பேசிய அந்தப் பகுதியும் அவைக்குறிப்பிலே இடம் பெறாது.

வினா எண் 26, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்கஅகற்றப்பெற்றன.